## 23. COMMUNICATION

**23.3 24 மாவட்ட மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு – ரூ.3.76 கோடி செலவில் சாதனங்கள் நிறுவுதல்**

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (மா,அதி–4) துறை

அரசாணை (நிலை) எண் 134 நாள் : 2.8.2007

படிக்க :

இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை, க.எண் 18236/06/யீசு 1,2,3 நாள் 20.6.2007.

**ஆணை**

மாண்புமிகு அமைச்சர் ஊரக வளர்ச்சி மற்றம் உள்ளாட்சி துறை அவர்கள் 12.4.07 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மான்யக் கோரிக்கை மீது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் பொழுதும், ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கத்தை தீவிரமாக கண்காணிக்கவும் மாவட்ட மற்றும் வட்டார நிர்வாகங்களுக்கு இடையே தடையற்ற தகவல் தொடர்புக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு அவசியமாகிறது எனவே, முதற்கட்டமாக 17 மாவட்டங்களில் வளர்ச்சித் துறையின் மாவட்ட மற்றும் வட்டார அலுவலகங்களுக்கு 4 கோடி ரூபாய் செலவில் கம்பியில்லா தகவல் தொடர்பு சமாதங்கள் (Wireles Sets) வழங்கப்படும்.

2. மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசிற்கு செயற்குறிப்பு ஒன்றினை படிக்கப்பட்ட கடிதத்தில் அனுப்பி வைத்துள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர். தனது கடித்தில் 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் சுனாமி மற்றும் பலத்த மழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டு அதன் காரணமாக கடற்கரையை ஒட்டிய மற்றும் உட்புற மாவட்டங்களில் பெருத்த பேரழிவு ஏற்பட்டது என்றும் மேற்கண்ட பேரழிவு சமயத்தில் பி.எஸ்.என்.எல் தரைவழி தொலைபேசி மற்றும் தனியார் நிறுவனங்களின் தகவல் தொடர்பு சாதனங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டமைப்புகளும் செயலிழந்து போய் மாவட்ட நிர்வாகங்கள் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து செய்வதில் சிரமம் ஏற்பட்டது என்றும் அச்சமயம் கடற்கரையை ஒட்டிய சில மாவட்டங்களில் இருந்த கம்பியில்லாத் தந்தி தொடரமைப்பு (Network) மாவட்ட அளவில் தொடர்பு கொள்வதற்கு மிகவும் உதவியாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.எனவே கம்பியில்லா தகவல் தொடர்பு முழு மாவட்டத்திற்கும் இருந்திருந்தால் மாவட்ட நிர்வகம் நிவாரணப்பணிகளை தேவையான இடங்களுக்கு மிக்க திறமையுடன் செய்திருக்க மிகவும் உதவியாக இருந்திருக்கும் என்று அச்சமயத்தில் உணரப்பட்டது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் கிராமங்களின் நலனுக்காக மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் குறிப்பாக, தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் போன்ற திட்டங்கள் அடிமட்ட கிராம ஊராட்சி அளவில் நாள் தோறும் கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. அதே போல மாநில அரசின் முக்கிய திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் செயல்பாடுகளை மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் எதிர்பாராத இயற்கை பேரழிவுகளை எதிர்கொண்டு கையாள்வதறக்கு ஏற்கனவே கீழ்க்கண்ட 10 மாவட்டங்களில் சொந்த நிதியை பயனபடுத்தி கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி வட்டார வளர்ச்சி அலுவலகத்துடனும் மற்றும் வாகனங்களுடனும் ஏற்பத்தப்பட்டு உள்ளது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| 1. திருவள்ளுர் | 8. நீலகிரி |
| 2.காஞ்சிபுரம் | 7. கிருஷ்ணகிரி |
| 3. விழுப்புரம் | 8. நாகப்பட்டிணம் |
| 4. கடலூர் | 9. திருநெல்வேலி |
| 5. சேலம் | 10.தூத்துக்குடி |

3. மேலும் கீழ்க்கண்ட 19 மாவட்டங்களில் தற்போது முழுமையாக கம்பில்லாத தொடர்பு வசதி இல்லாமல் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| 1. திருச்சி | 11. கோயம்புத்தூர் |
| 2. மதுரை | 12.கரூர் |

| | |
|---|---|
| 3. தேனி | 13.திண்டுக்கல் |
| 4. சிவகங்கை | 14. பேரம்பலூர் |
| 5. விருதுநகர் | 15. தஞ்சாவூர் |
| 6. வேலூர் | 16. புதுக்கோட்டை |
| 7.திருவண்ணாமலை | 17. ராமநாதபுரம் |
| 8 . தருமபுரி | 18. கன்னியாகுமாரி |
| 9. ஈரோடு | 19. திருவாருர் |
| 1.0.நாமக்கல் | |

4. தற்போது கீழ்கண்ட மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் அவர்களது அலுவலகங்கள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை அடிப்படை நிலையத்துடன் (Base Station) இணைக்கவும் வாகனங்களில் செல்லும் போது தகவல் தொடர்புக்காக வாகனங்களில் மொபைல் ரேடியோ அமைக்கவும் உத்தேசித்துள்ள்தாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**அ. மாவட்ட அளவில் அலுவலர்கள் / அலுவகங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர். | அலுவலகம் மற்றும் மொபைல் |
| 2. | திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | அலவலகம் மற்றும் மொபைல். |
| 3. | செயற் பொறியாளர் (ஊ.வ) (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) | மொபைல் |
| 4. | நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) | அலுவலகம் |
| 5. | உதவி இயக்குநர் (ஊராட்சி) | அலுவலகம் மற்றும் மொபைல் |
| 6. | உதவி இயக்குநர் (தணிக்கை) | அலுவலகம் |
| 7. | உதவி செயற் பொறியாளர் (ஊ,வ) | அலுலவகம் மற்றும் மொபைல் |

**ஆ. ஊராட்சி ஒன்றிய அளவில்**

| | | |
|---|---|---|
| 1. | வட்டார வளர்ச்சி அலுலவர் (வ.ஊ) | அலுவலகம் மற்றும் மொபைல் |
| 2. | வட்டார வளர்ச்சி அலுலவர் (கி.ஊ) | மொபைல் |
| 3. | வட்டார பொறியியல் பிரிவு | அலுவலகம் |

ஒவ்வொரு அலுவலகத்திற்கும் அடிப்படை நிலையம் (Base Station) மற்றும் மாவட்ட மற்றும் வட்டார அலுவலகங்களில் உள்ள வாகங்களுக்கான நடமாடும் நிலையத்திற்கும் (Mobile Station) கூடுதலாக, நடமாடும் ரேடியோ தகவல் தொடர்பு சேவை சிறப்பாக மாவட்டம் முழுவதும் செயல்படுவதற்கு ஏதுவாக ஒரு ரிப்பிட்ரை (Repeater) முக்கியமான இடத்தில் அமைக்க வேண்டும் என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. 2007–2008 –ஆம் ஆண்டில், முழுவதும் கம்பிய்ல்லா தகவல் தொடர்பு இல்லாத 19 மாவட்டங்களில் கோயம்புத்தூர் பெரம்பலூர், வேலூர், தேனி மற்றும் நாமக்கல் ஆகிய 5 மாவட்டங்களை தற்போதைக்கு விலக்கிவிட்டு, எஞ்சிய 14 மாவட்டங்களையும் எற்கனவே பாதி அளவில் கம்பியில்லாத் தகவல்தொடர்பு வசதி உள்ள 10 மாவட்டங்களையும் சேர்த்து ஆக மொத்தம் 24 மாவட்டங்களில் மேற்கண்ட கம்பியில்லா தொடர்பு வசதிகளை ரூபாய் 3.76 கோடி செலவில் ஏற்படுத்தலாம் என்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர். அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுப்பி வைத்துள்ள மேற்கண்ட செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலணை செய்தது அதன்பின், அச்செயற்குறிப்பினை ஏற்பதென்று அரசு முடிவு செய்தது. அதன்படி தமிழ்நாட்டில்

## 23. COMMUNICATION

கீழ்கண்ட 24 மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி செய்து கொடுப்பதறக்காக ரூ.3.76 கோடி (ரூபாய் மூன்று கோடியே எழுபத்து ஆறு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி | 9. திண்டுக்கல் | 17. விழுப்புரம் |
| 2. மதுரை | 10. தஞ்சாவூர் | 18. கடலூர் |
| 3. சிவகங்கை | 11. புதுக்கோட்டை | 19. சேலம் |
| 4. விருதுநகர் | 12. இராமநாதபுரம் | 20. நீலகிரி |
| 5. திருவண்ணாமலை | 13. கன்னியாகுமரி | 21. கிருஷ்ணகிரி |
| 6. தருமபுரி | 14. திருவாரூர் | 22. நாகப்பட்டிணம் |
| 7. ஈரோடு | 15 திருவள்ளுர் | 23. திருநெல்வேலி |
| 8. கரூர் | 16 காஞ்சிபுரம் | 24. தூத்துக்குடி |

7.எஞ்சிய 5 மாவட்டங்களான (1) கோயம்பத்தூர், (2) வேலூர் (3) பெரம்பலூர் (4) . தேனி மற்றும் 5) நாமக்கல் மாவட்டங்களில் 2008–2009–ம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சி'த் தலைவர்களுக்கு உள்ளபடியான தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்குமாறு ஆணயிடப்படுகிறது,

9. கம்பியில்லா தகவல் தொடர்பு அலைவரிசையை பெறுதல், கருவிகளைக் கொள்முதல் செய்வதற்கான திட்டம் மற்றும் இதற்கான மாவட்ட அளவிலான குழு அமைத்தல். கருவிகள் ஆண்டு பராமரிப்பு செலவினம் மற்றும் பணியாளர் நியமனம் குறித்து பின்பற்றப்பட வேண்டிய.

வழிகாட்டி நெறிமுறைகள் குறித்த விரிவாக இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

10. மேலே பத்தி 6–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பில் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> ''2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 102 சமுதாய வளர்ச்சி –பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II. மாநிலத் திட்டம், KO மாவட்டங்களில் .09 கம்பி இல்லா தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்துதல் உதவி மானியங்கள் 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்'' (DC NO, 2515 00 102 KO 0932)

11. இது ஒரு 'புதுப்பணி' (New Service) குறித்த செலவினமாகும் இச்செலவினத்திற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BGI) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (BGI) துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இந்த செலவினத்தை 2007–2008–ம் ஆண்டிற்கான முதலாவது துணை மானியக் கோரிக்கையில் சேர்த்திட தக்க விளக்கக் குறிப்புடன் உரிய தருணத்தில் வரவு செலவுத் திட்டக் கருத்துருக்காளை அனுப்பி வைக்குபடியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

12. இப்புதிய கணக்கு தலைப்பிற்கு மதிப்பீட்டு கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இருப்பார். மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் / கரூவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13. இத்திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகளில் எதிர்காலத்தில் ஏற்படும் நிலமைகளை கருத்தில் கொண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரிடம் கலந்து ஆலோசித்து, தேவையான மாற்றம் செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை செயலருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

14. இவ்வாணை நிதிக் துறையின் இசைவுடன், அ.சா.கு எண் 48370/ஊ.வ/2007, நாள் 30.7.2007 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கம் பேரேடு எண். 585 (ஐந்நூற்று எண்பத்தி ஐந்து)– இல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்

Annexure – 1
STATEMENT SHOWING TOTAL COST FOR IMPLEMENTATION OF WIRELESS PROJECT – PHASE I (2007-08

| S. No. | Name of the District | Total requirement | | | Total equipment cost | | | Licence fees payable | Royalty fees | | | Total cost | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Static | Mobile | Repeat er | Cost of Static @ Rs. 30000 | cost of mobile @ Rs. 13500/ per unit | Cost of repeater @ Rs. 200000/ per unit | Static Repeater @ Rs.500/ per unit | Mobile @ Rs.250/ per unit | Royalty fees for the first three stations LS Rs.9000/- | Royalty fees unit for the rest no. of units | Royalty fees for the rest @ Rs.2200/ per unit | |
| 1 | Kancheepuram | 17 | 13 | 1 | 510000 | 175500 | 200000 | 9000 | 3250 | 9000 | 15 | 33000 | 939750 |
| 2 | Thiruvallur | 18 | 15 | 2 | 540000 | 202500 | 400000 | 10000 | 3750 | 9000 | 17 | 37400 | 1202650 |
| 3 | Salem | 26 | 21 | 1 | 780000 | 283500 | 200000 | 13500 | 5250 | 9000 | 24 | 52800 | 1344050 |
| 4 | Nilgiris | 6 | 5 | 0 | 180000 | 67500 | 0 | 3000 | 1250 | 9000 | 3 | 6600 | 267350 |
| 5 | Nagapattinam | 17 | 11 | 0 | 510000 | 148500 | 0 | 8500 | 2750 | 9000 | 14 | 30800 | 709550 |
| 6 | Tirunelveli | 23 | 25 | 1 | 690000 | 337500 | 200000 | 12000 | 6250 | 9000 | 21 | 46200 | 1300950 |
| 7 | Thoothukudi | 17 | 16 | 2 | 510000 | 216000 | 400000 | 9500 | 4000 | 9000 | 16 | 35200 | 1183700 |
| 8 | Cuddalore | 14 | 14 | 0 | 420000 | 189000 | 0 | 7000 | 3500 | 9000 | 11 | 24200 | 652700 |
| 9 | Villupuram | 25 | 23 | 0 | 750000 | 330500 | 0 | 12500 | 5750 | 9000 | 22 | 48400 | 1136150 |
| 10 | Krishnagiri | 13 | 10 | 0 | 390000 | 135000 | 0 | 6500 | 2500 | 9000 | 10 | 22000 | 565000 |
| 11 | Sivagangai | 31 | 30 | 4 | 930000 | 405000 | 800000 | 17500 | 7500 | 9000 | 62 | 136400 | 2305400 |
| 12 | Dindigul | 35 | 34 | 2 | 1050000 | 459000 | 400000 | 18500 | 8500 | 9000 | 68 | 149600 | 2094600 |
| 13 | T.V.Malai | 43 | 42 | 1 | 1290000 | 567000 | 200000 | 22000 | 10500 | 9000 | 83 | 182600 | 2281100 |
| 14 | Thanjavur | 36 | 35 | 3 | 1080000 | 472500 | 600000 | 19500 | 8750 | 9000 | 71 | 156200 | 2345950 |
| 15 | Thiruvarur | 27 | 26 | 1 | 810000 | 351000 | 200000 | 14000 | 6500 | 9000 | 51 | 112200 | 1502700 |
| 16 | Karur | 23 | 22 | 1 | 690000 | 297000 | 200000 | 12000 | 5500 | 9000 | 43 | 94600 | 1308100 |
| 17 | Trichy | 36 | 35 | 3 | 1080000 | 472500 | 600000 | 19500 | 8750 | 9000 | 71 | 156200 | 2345950 |
| 18 | Pudukottai | 33 | 32 | 2 | 990000 | 432000 | 400000 | 17500 | 8000 | 9000 | 64 | 140800 | 1997300 |
| 19 | Darmapurai | 22 | 21 | 1 | 660000 | 283500 | 200000 | 11500 | 5250 | 9000 | 41 | 90200 | 1259450 |
| 20 | Madurai | 33 | 32 | 3 | 990000 | 432000 | 600000 | 18000 | 8000 | 9000 | 65 | 143000 | 2200000 |
| 21 | Ramanathapuram | 29 | 28 | 4 | 870000 | 378000 | 800000 | 16500 | 7000 | 9000 | 58 | 127600 | 2208100 |
| 22 | Virudhunagar | 29 | 28 | 3 | 870000 | 378000 | 600000 | 16000 | 7000 | 9000 | 57 | 125400 | 2005400 |
| 23 | Kanniyakumari | 25 | 24 | 3 | 750000 | 324000 | 600000 | 14000 | 6000 | 9000 | 49 | 107800 | 1810800 |
| 24 | Erode | 48 | 47 | 2 | 1440000 | 634500 | 400000 | 25000 | 11750 | 9000 | 94 | 206800 | 2727050 |
| | Total | 626 | 589 | 40 | 18780000 | 7971500 | 8000000 | 333000 | 147250 | 216000 | 1030 | 2266000 | 37693750 |

**இணைப்பு** – II

**தகவல் தொடர்பு அலைவரிசையை பெறுதல்**

கம்பில்லாத் தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்துவதற்கு **146–174** ஆழண வரை உள்ள அலைவரிசையை புது டெல்லியில் உள்ள தகவல்தொடர்பு அமைச்சகத்தின் கம்பியில்லா தகவல் தொடர்பு திட்ட குழுவிடம் அனுமதி பெற வேண்டும். தந்போது உள்ள நடைமுறைப்படி முதல் கட்டமாக மேற்கண்ட மத்திய அரசு துறையிடம் பல்வேறு மாவட்டங்களுக்கு தேவையான ரிப்பீட்டர் அலைவரிசையில் (Repeater Frequency) ஒதுக்கீடு செய்வதற்கு உரிய படிவத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும். கம்பியில்லா தகவல் தொடர்பு திட்ட குழுவின் அலைவரிசை ஒதுக்கீட்டுக்கான கொள்கை அளவிலான கடிதம் பெறப்பட்டவுடன் கருவிகள் கொள்முதல் செய்வதற்கான நடைமுறை பின்பற்றப்படவேண்டும்.

**(ii) கருவிகள் கொள்முதல் திட்டம்**

கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள் மத்திய அரசின் பொருள் வழங்குதல் மற்றும் தீர்வு இயக்குநர் நிர்ணயித்த ஒப்பந்த விலையில் (DGS & D rate) வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

**(iii) மாவட்ட அளவிலான குழு**

மாவட்ட அளவில் மத்திய அரசின் பொருள் வழங்குதல் மற்றும் தீர்வு இயக்குநர், நிர்ணயித்த ஒப்பந்தவிலையில் கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள் கொள்முதல் செய்வதை முடிவு செய்ய கீழ்க்கண்டவாறு குழு அமைக்கப்படவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | மாவட்ட ஆட்சித் தலைவர் | – | தலைவர் |
| (ii) | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | – | உறுப்பினர் செயலாளர். |
| (iii) | செயற் பொறியாளர் (ஊ.வ) | – | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – உறுப்பினர். |
| (iv) | உதவி இயக்குநர் (கணக்கு) | – | உறுப்பினர் |
| (v) | உதவிஇயக்குநர் (ஊராட்சிகள்) | – | உறுப்பினர். |

**(iv) கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள்.**

**ஆண்டு பராமரிப்பு** (Annual Maintenance)

இந்த கருவிகளுக்கான உத்திரவாத காலம் முடிவடைந்தபின் இக்கருவிகளை பராமரிப்பதற்காக, ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (Annual Maintenance Contract) ஒன்றை (கருவிகளின் விலை மதிப்பிற்கு 2% மிகைப்படாமல்) ஏற்றுக் கொள்ளும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இதற்கான தொகையை, இயக்குநகரத்தில் வைத்துள்ள இத்திட்டத்தின் எஞ்சியுள்ள தொகையிலிருந்து அளிக்கப்படும். மேலும் இந்த செலவினம் சம்பந்தமாக கூடுதல் தொகை தேவைப்படின் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைப் பொறுத்த வரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக நிதியிலிருந்தும், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் அலுவலக நிர்வாக நிதியிலிருந்தும் பிற அலுவலங்களை பொறுத்தவரை எதிர்பாராத சில்லரை செலவினங்களுக்கான தொகையிலிருந்தும் செலவு செய்து கொள்ளலாம்.

**(v) பணியாளர் நியமனம்**

கம்பியில்லா தகவல் தொடர்பு சாதன திட்டத்தை செயல்படுத்தவதற்க புதிய பணியாளர் நியமனம் எதுவும் தேவையல்லை. வானொலி மேற்பார்வையாளர்கள் (Radio Supervisors) உள்ளிட்ட தற்போது உள்ள பணியாளர்களை பயன்படுத்தி தேவைப்படும் அன்றாட பணிகளை மேற்கொள்ளலாம்.

பிரிவு அலுவலர்.